# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : வரலாறு

பகுதி : **இந்திய தேசிய காங்கிரஸ்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய தேசிய காங்கிரஸ்

## இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்

இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வது கடினமாக உள்ளது. அது எவ்வாறு தோன்றியது, அதனை உருவாக்கியவர் யார், அதனுடைய உண்மையான நோக்கம் என்ன என்பனவற்றில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. மக்கள் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், அனைத்து மக்களும் ஈடுபடும் சுதந்திரப் போராட்டத்தைப் பரவலாக அமைக்கும் பொருட்டும், பொது மக்களிடையே அரசியல் உணர்வைப் பரப்பவும் ஒரு அனைத்திந்திய அமைப்பு அவசியம் என்பதை அரசியல் விழிப்பு கொண்ட இந்தியர் தெளிவாக உணரலாயினர். அத்தகைய அமைப்பு உருவாவதற்கான சமுதாய அடித்தளம் ஏற்கனவே அமைக்கப்பட்டு போதிய அனுபவமும் திரட்டப்பட்டிருந்தது.

மேற்கு இந்தியாவில் தாதாபாய் நௌரோஜி, நீதிபதி ரானடே பெரோஷா மேத்தா, கே.டி. தேவங், ரஹ்மத்துல்லா, முகமது சயானி, பத்ரூதீன் தயாப்ஜி ஆகியோரும், தென்னிந்தியாவில் ஜி.சுப்ரமணிய ஐயர், எஸ். சுப்ரமணிய ஐயர், ஆனந்த சார்லு ஆகியோரும், கிழக்கிந்தியாவின் W.C. பானர்ஜி, சுரேந்திரநார் பானர்ஜி, ஆனந்த மோகன் போஸ், லால் மோகன் கோஷ் ஆகியோரும் அனைத்திந்திய தேசிய அமைப்பு ஒன்றை உருவாக்க ஒரே நேரத்தில் திட்டமிடத் தொடங்கியிருந்தனர்.

1877ல் கூடிய தர்பார் அல்லது கல்கத்தாவில் நடைபெற்ற பன்னாட்டுக் கண்காட்சியே காங்கிரஸ் முன் மாதிரியாகக் கொண்டிருக்க வேண்டும்”

1883 டிசம்பரில் இந்திய சங்கம் அனைத்திந்திய தேசிய மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தது. ஆனால் அது வெற்றி பெறவில்லை. மேலும் 1884 டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற பிரம்மஞான சபைக் கூட்டத்திற்குப் பிறகு 17 பேர் தனியாகக் கூடி காங்கிரஸ் பற்றி முடிவெடுத்ததாகக் கருதுகிறார் பட்டாபி சீதாராமையா.

சுரேந்திரநாத் பானர்ஜியின் முயற்சியால் கல்கத்தாவில் கூடிய தேசிய மாநாடுதான் காங்கிரசுக்கு வடிகாட்டியிருக்க வேண்டும்”

1885, டிசம்பர் இறுதியில் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அரசியல் தலைவர்களை பம்பாயில் ஒன்று திரட்ட பம்பாய் தேசிய அரசியல் தொண்டர்கள் சிலர் அரசாங்க உயர் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆங்கிலேயரான ஆலன் அக்டேவியன் ஹியூமின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட முயற்சி வெற்றியடைந்து இந்திய தேசிய காங்கிரஸ் உதயமானது.

## இந்திய தேசியக் காங்கிரசின் முதலாவது கூட்டம் : 1885

இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது கூட்டம் புனே நகரில் தான் கூடுவதாக இருந்தது. ஆனால் அங்கு காலரா நோய் பரவி இருந்ததால் பம்பாயில் கூடியது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 72 அரசியல் தலைவர்கள் பம்பாயிலுள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரி மண்டபத்தில் கூடினர். இக்கூட்டத்திற்கு அக்காலத்தில் கல்கத்தாவின் புகழ் பெற்ற வழக்கறிஞராக இருந்த உமேஸ் சந்திர பானர்ஜி தலைவராகவும், ஹியூம் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தேடுக்கப்பட்டனர். மேலும் பிரோஷா மேத்தா, தாதாபாய் நௌரோஜி, K.D. திலாங், டின் ஷாவாச்சா, ரானடே, G. சுப்ரமணிய ஐயர் போன்ற பெரும தலைவ்கள் கலந்து கொண்ட கூட்டம் உண்மையிலேயே ஒரு தேசியக் கூட்டமாக விளங்கியது. இந்த முதலாவது கூட்டம் 1885, டிசம்பர் 25 முதல் 31ம் தேதி வரை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரை ஆற்றிய பானர்ஜி காங்கிரசின் குறிக்கோளை விளக்கிப் பேசினார். தொண்டர்களிடையே நேரடியான தொடர்பையும், நேசத்தையும் வளர்த்தல், நாட்டின் மீது பற்றுக் கொண்டோரிடம் இனம், மொழி, சமய வேற்றுமைகளை அகற்றுதல், அன்பிற்குரிய ரிப்பன் பிரபு காலத்தில் உருவாகிய தேசிய ஒற்றுமைக்கான உணர்வுகளை உறுதிப்படுத்துதல், நாட்டின் நலனுக்கான உள்நாட்டுத் தலைவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகளைத் தீர்மானித்தல் ஆகியவையே காங்கிரசின் குறிக்கோள்கள் என்றார் பானர்ஜி.

இந்த முதல் காங்கிரஸ் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இந்தய அரசாங்கத்தின் நடைமுறை பற்றி விசாரிக்க அரசு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.
2. இந்தியக் கவுன்சில் சபையை நீக்க வேண்டும்.
3. புதிதாகத் தோன்றிய பஞ்சாப், அயோத்தி, வட மேற்கு எல்லைப்புற மாகாணங்களில் சட்ட சபைகளை ஏற்படுத்த வேண்டும்.
4. சட்டசபைகளில் தேர்ந்தேடுக்கப்பட்ட உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதுடன், கேள்வி கேட்கவும், வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கவும் உரிமை வழங்க வேண்டும்.
5. இந்திய அரசாங்கப் பணிக்கான தேர்வுகளை இந்தியாவிலும் நடத்துவதுடன் அதில் கலந்து கொள்வதற்கான வயதையும் உயர்த்த வேண்டும்.

## இந்திய தேசிய காங்கிரசின் ஆரம்பகால வளர்ச்சி : 1885-1905

இவ்வாறு எளிய ஆனால் சிறப்பான முறையில் தோன்றிய இந்திய தேசியக் காங்கிரஸ் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் கூட்டங்களை நடத்தியது.

1. இந்திய தேசியக் காங்கிரசின் இரண்டாவது கூட்டம் கல்கத்தாவில் 1886ல் நடைபெற்றது. இதில் பல மாநிலங்களிலிருந்தும் நானூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டத்திற்குப் பொது மக்களும் பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டனர். இதில் கூலி முறை விஸ்தரிப்பு, நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைப் பிரித்தல் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களுக்கு வைசிராய் டஃப்ரின் பிரபு அரசாங்க மாளிகையில் தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்.

2. மூன்றாவது மாநாடு 1887-ல் சென்னையில் புகழ்பெற்ற முஸ்லீம் தலைவர் பக்ருதீன் தியாப்ஜி தலைமையில் கூடியது. 600க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காங்கிரசுக்கு முறையான அமைப்பு பற்றி முடிவெடுக்கவும், தீர்மானங்களுக்கு வடிவம் கொடுப்பதற்கும் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன. சட்டசபை சீர்த்திருத்தத்துடன், படைப் பயிற்சியளிக்க இந்தியாவிலேயே ராணுவக் கல்லூரி அமைக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது சென்னை மாநிலக் கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபு காங்கிரஸ் பிரநிதிகளுக்கு வரவேற்பு அளித்தார்.

3. நான்காவது கூட்டம் 1888ல் அலகாபாத்தில் ஆண்ட்ரு யூல் தலைமையில் நடைபெற்றது. பல முஸ்லீம்கள் உட்பட 1200 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 1889ல் ஐந்தாவது கூட்டம் பம்பாயில் சர் வில்லியம் வெட்டர்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியாவிற்கான உறுப்பினர் சார்லஸ் பிரெட்லா கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் பிரதிநித்துவ அரசாங்கம், நிலவரிக் கொள்கை தொடர்பான தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

4. ஆறாவது கூட்டம் 1890ல் சர் P.M. மேத்தா தலைமையில் கல்கத்தாவில் கூடியது. ஏழாவது கூட்டம் 1891ல் நாக்பூரில் P. அனந்தாச்சார்லு தலைமையில் கூடியது. எட்டாவது கூட்டம் 1892ல் அலகாபாத்தில் W.C. பானர்ஜியின் தலைமையில் கூடியது. அந்த ஆண்டில் நிறைவேறிய இந்தியக் கவுன்சில் சட்டம், காங்கிரஸ் துவங்கி அரசியலமைப்பு முறையிலான போராட்டத்தின் முதல் வெற்றிஎன்று கொண்டாடப்பட்டது.

5. காங்கிரசின் பத்தாவது கூட்டம் 1893ல் தாதாபாய் நௌரோஜி தலைமையில் லாகூரில் கூடியது. இதில் இந்தியாவில் உற்பத்தியான பருத்தி ஆடைகள் மீதான கலால் வரியை நீக்குதல், பிரிட்டிஷ் அரசுக்கு ஆகும் செலவைக் குறைத்தல், கட்டாய வேலை வாங்குவதை நிறுத்துதல் போன்ற தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

6. காங்கிரசின் 11வது கூட்டம் 1894ல் சென்னையில் அயர்லாந்தைச் சேர்ந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஆல்பிரட் வெப் என்பவரின் தலைமையில் கூடியது. அதில் பிரிட்டிஷ் குடியேற்றங்களில் இந்தியரின் நிலைமை பற்றிய தீர்மானம் நிறைவேறியது. 1895ல் புனேயில் கூடிய காங்கிரசின் 12வது கூட்டத்திற்கு சுரேந்திரநாத் பானர்ஜி தலைவராக விளங்கினார். இதில் விவசாயிகளின் கடன் பளு பற்றியும், புகை வண்டிகளில் மூன்றாம் வகுப்புப் பயணிகளின் வசதியைப் பெருக்குதல் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேறின.

7. காங்கிரசின் 13வது கூட்டம் முகமது ரகிமதுல்லா சயானியின் தலைமையில் 1896ல் கூடியது. சுதந்திரம், கல்வித் துறையை திருத்தி அமைத்தல் போன்றவைகள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேறின. 1897ல் 14ம் கூட்டம் C. சங்கரன்நாயர் தலைமையில் அம்ரோட்டி நகரில் நடைபெற்றது. 1898ல் 15வது கூட்டம் ஆனந்தமோகன் போஸ் என்பவரின் தலைமையில் சென்னையில் கூடியது.

இதேபோல் 1899ல் லக்னோவில் R.C. தத்தின் தலைமையில் கூடியது. 1900ல் N.G சந்தவர்னர் தலைமையில் லாகூரிலும், 1901ல் D.C. வச்சா தலைமையில் கல்கத்தாவிலும், 1902ல் சுரேந்திரநாத் பானர்ஜியின் தலைமையில் அகமதாபாத்திலும், 1903ல் லால் மோகன் கோஷின் தலைமையில் சென்னையிலும், 1940-ல் சர் ஹென்றி காட்டன் காசியிலும் காங்கிரஸ் கூட்டங்கள் கூடி பலவகையான பொருள்களை ஆராய்ந்து தீர்மானங்களை நிறைவேற்றின.

## காங்கிரசில் பிளவு ஏற்படுதல்

### 1. கல்கத்தா மாநாடு : 1906

இத்தகைய மாறிய சூழ்நிலையில் 1906ல் கல்கத்தாவில் காங்கிரஸ் மாநாடு கூடியது. கோகலேயின் தலைமையிலான மிதவாதிகளுக்கும், திலகரின் தலைமையிலான தீவிரவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தீவிரமடைந்தன. எனவே அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முதுபெரும் கிழவரான தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தனது தலைமை உரையில் சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியே இந்தியாவின் கனவு என்று எடுத்துரைத்தார். அந்தச் சொல் அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களின் தாரக மந்திரமாக விளங்கியது. இந்திய தேசிய இயக்கத்தில் இந்தக் கொள்கை அறிவிப்பு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. சுதேசி இயக்கம் பற்றியும் இந்த மாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது.

### 2. சூரத் மாநாடும் காங்கிரசில் பிளவும் : 1907

1907ம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தில் புயல் வீசத் தொடங்கியது. 1907ல் நாக்பூரில் கூடியிருந்த காங்கிரஸ் மாநாடு சூரத் நகருக்கு மாற்றப்பட்டது. திலகரின் சொந்த ஊரான நாக்பூரில் தங்களுக்குச் சாதகமான நிலை இருக்காது என்று கருதியே மிதவாதிகள் சூரத்தைத் தேர்ந்தெடுத்தனர். தீவிரவாதிகளின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டால் திசை தெரியாத பாதையில் காங்கிரஸ் செல்ல நேரிடும் என்று மிதவாதிகள் அஞ்சினர். ஆனால் தீவிரவாதிகளோ ஆங்கிலேயர்களிடம் அரசியல்

பிச்சை எடுத்துப் பயனில்லை, நமது உரிமையை நாமே தட்டிக் கேட்க வேண்டும என்று மனதார நம்பினர்.

திலகர் மிதவாதிகளைத் தாக்கிப் பேசினார். அவர்கள் காங்கிரசை பிற்போக்குக் கழகமாக மாற்றி வருகின்றனர் என்று சாடினார். கல்கத்தாவின் நிறைவேறிய தன்னாட்சித் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால் மிதவாத வேட்பாளரை மாநாட்டுத் தலைவராக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். மிதவாதிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட பதட்டமான சூழ்நிலையில் சூரத் மாநாடு கூடியது. பெரும் கூச்சல் குழப்பத்திற்கிடையே ராஜ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தலைமை உரை ஆற்ற வந்த போது தீவிரவாதத் தலைவர்களின் ஆதரவாளர்கள் கலகம் செய்தனர். கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. மறுநாள் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் தனித்தனியே கூடினர். ஒருவருக்கொருவர் இனி எந்த உறவும் வைத்துக் கொள்வதில்லை என்று தீர்மானித்தனர். இவ்வாறு காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது.

## சூரத் பிளவுக்குப் பிறகு தீவிரவாதிகள்

சூரத் பிளவிற்குப் பிறகு தீவிரவாதிகளைத் தீண்டத்தகாதவர்கள் போல மிதவாதிகள் பாவித்தனர். அவர்களைக் காங்கிரசிலிருந்து விலக்கி வைக்கும் வகையில் காங்கிரசின் அமைப்பு விதிகள் மாற்றப்பட்டன. தீவிரவாதிகள் வெளியேற்றப்பட்டுவிட்டதால் எவ்வித இடையூறும் இல்லாமல் காங்கிரஸ் பல தீர்மானங்களை இயற்றி அரசாங்கத்திடமிருந்து சில சலுகைகளைப் பெற்றது.

சூரத் பிளவிற்குப் பிறகு திலகர் பம்பாய் மாநிலத்திலும் நாட்டின் பிறபகுதிகளிலும் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தார். தன்னாட்சி பெறவும், நாட்டை விடுவிக்கவும் எத்தகைய போராட்டத்திற்கும், தியாகத்திற்கும் மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சுயராஜ்யமே நமது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம் என்றார். திலகர் தலைமையிலான தீவிரவாதிகள் ஓராண்டு காலத்திற்கு மும்முரமாகப் பணியாற்றி ஓய்ந்து விட்டனர்.

அரசாங்கம் தீவிரவாதிகள் மீது அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1908ல் திலகர் கைது செய்யப்பட்டு மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார். தகுந்த தலைவரில்லாமல் தவித்த தீவிரவாதிகள் கட்சி செல்வாக்கிழந்து சின்னாபின்னமாகியது. 1908லிருந்து 1914ம் வருடம் வரை திலகர் சிறையில் இருந்ததால் இந்திய அரசியலில் சிறிது மந்த நிலை ஏற்பட்டது.

## பிளவுபட்ட காங்கிரஸ் ஒன்றுபடல்

ஆறு ஆண்டு கால சிறைத் தண்டனைக்குப் பிறகு 1914ல் திலகர் விடுதலை செய்யப்பட்டார். அதேசமயம் அன்னிபெசன்ட் அம்மையாரும் காங்கிரசில் சேர்ந்தார். இவரும் வேறு சிலரும் சேர்ந்து தீவிரவாதிகளையும் மிதவாதிகளையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். திலகரும் பிளவை வளர்க்க விரும்பாமல் மிதவாதிகளுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்பினார். எனவே

மிதவாதிகள் மனம் புண்படாதவாறு பேசி வந்தார். இதனால் காங்கிரசில் தீவிரவாதிகள் நுழைவதற்கு ஏற்றவாறு அமைப்பு விதிகளை மாற்றுவது அவசியமானது. இதற்காக கோகலேயுடன் அன்னிபெசன்ட் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சூழ்நிலையில் 1915, பிப்ரவரியில் கோகலே மரணமடைந்தார். மேலும் மிதவாதிகள் தீவிரவாதிகளின் ஒற்றுமையை எதிர்த்து வந்த பிரோஷா மேத்தாவும் இறந்து விட்டார். 1915ல் சின்ஹாவின் தலைமையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் தீவிரவாதிகள் காங்கிரசில் சேருவதற்கு வகை செய்யும் தீர்மானம் ஒன்று இயற்றப்பட்டது.

சூரத் பிளவிற்குப் பிறகு 1916ல் லக்னோவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முதன் முறையாகத் திலகர் கலந்து கொண்டார். திலகரும் அவரது ஆதரவாளர்களும் சேர்ந்ததால் காங்கிரஸ் மீண்டும் உயிர்ப்புள்ள இயக்கமாக மாறியது. மக்கள் கவனத்தை ஈர்க்கும் சக்தி வாய்ந்ததாகத் திகழ்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் காந்தியடிகளின் தலைமையில் இந்த இருபிரிவினரும் ஒருங்கிணைந்து நாட்டின் நலன் கருதி செயல்படத் தொடங்கினர்.

## வினாக்கள்

1. காங்கிரஸில் பிளவு ஏற்படுதல் மற்றும் ஒன்றுபடுதல் பற்றி குறிப்பு வரைக.
2. இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது கூட்டம் பற்றி சுருக்கமான விடையை தருக.
3. இந்திய தேசய காங்கிரசின் ஆரம்பகால வளர்ச்சியினை எடுத்துக் கூறுக.